செய்தி வெளியீடு எண்: 1049 நாள்: 30.11.2010.

## <u>முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பெருமழையினால் ஏற்பட்டுள்ள சேதங்கள் குறித்து இன்று ஆய்வு செய்தார்.</u>

## <u>நிவாரண நடவடிக்கைகளை முழுமையாக மேற்கொள்வதற்கு முதற்கட்டமாக 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்தும்; குடிசைகளை இழந்தோர்க்கு நிவாரண உதவியை 5 ஆயிரம் ரூபாயாக உயர்த்தியும் முதலமைச்சர் கலைஞர் ஆணை!</u>

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர், தற்போது பெய்துவரும் வடகிழக்குப் பருவமழையினால் ஏற்பட்டுள்ள விளைவுகள் குறித்து, புனித ஜார்ஜ் கோட்டையில் இன்று (30.11.2010) ஆய்வு செய்தார்.

பெருமழையினால் பாதிக்கப்பட்டுள்ள மாவட்டங்களில், மாவட்ட ஆட்சியர்கள் உயிரிழந்தோரின் குடும்பங்களுக்கு தலா 2 இலட்சம் ரூபாய் வீதமும்; உயிரிழந்த கால்நடைகளுக்கு தலா 10 ஆயிரம் ரூபாய் வரையிலும்; தேவையான இடங்களில் உணவு வழங்கியும் தொடர்ந்து நிவாரண நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

தண்ணீரில் மூழ்கியுள்ள பயிர்களை மதிப்பீடு செய்து, சேதம் குறித்த அறிக்கை அனுப்பும் பணியில் மாவட்ட ஆட்சியர்கள் ஈடுபட்டு வருகிறார்கள். பாலங்கள், சாலைகள், ஏரிகள் போன்றவற்றில் ஏற்பட்டுள்ள சேதங்களை தற்காலிகமாகச் சீரமைக்கும் பணிகள் போர்க்கால அடிப்படையில் சம்பந்தப்பட்ட துறையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும், குடிசைகளை இழந்தோருக்கு – முழுமையான அளவில் குடிசைகள் சேதம் அடைந்திருந்தால், ஏற்கனவே வழங்கப்பட்டு வந்த 2 ஆயிரம் ரூபாய் என்பதை 5 ஆயிரம் ரூபாயாகவும்; பகுதியாக குடிசைகள் சேதமடைந்திருந்தால், ஏற்கனவே வழங்கபட்டு வந்த ஆயிரம் ரூபாய் என்பதை 2 ஆயிரத்து 500 ரூபாயாகவும் உயர்த்தி வழங்கிட முதலமைச்சர் கலைஞர் இன்று ஆணையிட்டுள்ளார்.

**இந்தப் பெருமழையினால் ஏற்பட்டுள்ள பேரிடர் தொடர்பான நிவாரணம் மற்றும் சீரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக முதற்கட்டமாக 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து முதலமைச்சர் கலைஞர் இன்று அறிவித்துள்ளார்.**

**வெளியீடு:–இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

* * *